# செப்டம்பர் 16
# புனித கொர்னேலியுஸ் சிப்பிரியான் (-253)




கொர்னேலியுஸ் பாப்பானவர் பதவியேற்றார். உடனே நோவாசியான் என்பவரும் அப்பதவி மீது உரிமை பாராட்டினார். பாப்பானவர் இத்தாலியா நாட்டில் ஒரு சங்கத்தை கூட்டினார். 60 ஆயர்கள் இவரை ஆதரித்தார்கள். எனவே கொர்னேலியுஸ் உண்மையான பாப்புவாக ஆட்சி நடத்தினார். வேத கலாபனையின் போது கிறிஸ்தவ வேதத்தை மறுதலித்தவர்களை திரும்ப சேர்ப்பதைப் பற்றி சிப்பிரியானுக்கு கடிதங்களில் கொர்னேலியுஸ் குறிப்பிடுகிறார். உரோமைப் பாப்புவின் அதிகாரத்தை இக்கடிதங்கள் காண்பிக்கின்றன. 253-ஆம் ஆண்டில் இவர் வேதத்திற்காகக் கொல்லப்பட்டார்.

ஆப்பிரிக்காவிலுள்ள கார்த்தேஜ் நகரில் சிப்பிரியான் பிறந்தார். இவர் கல்விப் பயிற்சி பெற்று பேராசிரியர் ஆனார். கிறிஸ்தவ மதத்தின் உயர்வை இவர் அறிய வந்தாலும், சிறிது காலம் கடவுளது குரலை எதிர்த்து நின்றார். பின்னர் கிறிஸ்தவரானார். இவர் தனிமையை நாடி தவவாழ்வு நடத்தினார். குருப்பட்டம் பெற்று ஆயரானார். ஒரு பேரரசன் கொடிய வேத கலகத்தைத் தொடங்கினான். பேரரசனின் கட்டளை 250-ஆம் ஆண்டின் தொடக்கத்தில் கார்த்தேஜ் நகரை அடைந்தது. புயல் வருமுன் ஒளிந்து கொள்வது நல்லது என்று சிப்பிரியான் கருதி சிறிது காலம் நகரை விட்டு மறைந்து வாழ்ந்தார். எனினும் தம் மக்களுடன் கடிதப் போக்குவரத்து வைத்திருந்தார். வேதத்தை விட்டு விலகி பின் அதில் சேர விரும்பியவர்களை இவர் மிகுந்த அன்புடனும் விவேகத்துடனும் நடத்தினார்.

**சிந்தனை:** பலவீனத்தாலோ, அறியாமையாலோ, வேண்டுமென்றோ வேதத்தை மறுதலித்தவர்கள் மீது நாம் இரக்கமாய் இருக்க வேண்டும்.

**செபம்:** ஆண்டவரே, உம்மை விட்டு விலகி நிற்பவர்கள் மேல் இரக்கமாயிரும்.